செ.வெ.எண்: 133 நாள்: 07.12.2020

**வீரகேரளம்புதூர், தென்காசி மற்றும் கடையநல்லூர் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் நேரடி மாணவர் சேர்க்கை இன்று தொடங்குகிறது**

-----------

2020-21ஆம் ஆண்டிற்கான அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கை நடைபெற்றது. எனினும் வீரகேரளம்புதூர், தென்காசி மற்றும் கடையநல்லூர் ஆகிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பொருத்துனர் (Fitter), மின்சாரபணியாளர் (Electrician), கம்பியாள்(Wireman), பற்றவைப்பவர் (Welder), கம்மியர் மோட்டார் வண்டி (Mechanic Motor Vehicle), பம்ப் ஆபரேட்டர் கம் மெக்கானிக் (Pump Operator Cum Mechanic), டீசல் மெக்கானிக் (Diesel Mechanic) ஆகிய தொழிற்பிரிவுகளில் குறிப்பிட்ட இடங்கள் காலியாக உள்ளன. எனவே இந்த 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 05.12.2020 முதல் 12.12.2020 வரை நேரடியாக மாணவர் சேர்க்கை நடைபெறவுள்ளது. எனவே மாணவர்கள் அந்தந்த தொழிற்பயிற்சி நிலையங்களை உடனடியாக அணுகி காலியாக உள்ள தொழிற்பிரிவை தேர்ந்தெடுத்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 04633 280933 மற்றும் 04633 277962 என்ற தொலைபேசி எண்களிலும் 7708467041 9994416525 என்கிற செல்போன் எண்களிலும் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி.